# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 124/மாநகராட்சி/2018**

**நாள் : 24/09/2018**

**திரு மாலே பட்டாச்சாரியார்,
தியாகராயா நகர்,
சென்னை – 600 017.** – **முறையீட்டு மனுதாரர்**

**திரு சுரேஷ்பாபு,
உதவி செயற்பொறியாளர்,
10–வது மண்டலம்,
சென்னை மாநகராட்சி..** – **எதிர் மனுதாரர்**

சென்னை மாநகராட்சி, தி.நகர், ரெங்கநாதன் தெரு, எண்.103/2 A முகவரியில் வசிக்கும் திரு மாலே பட்டாச்சாரியார் அவர்களின் நாளிடப்படாத முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.06.2018 அன்று பெறப்பட்டு 124/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை மாநகராட்சி, தி.நகர், ரெங்கநாதன் தெரு, எண்.103/2 A முகவரியில் வசிக்கும் திரு மாலே பட்டாச்சாரியார் என்பவர், 10–வது மண்டலத்திற்குட்பட்ட தி. நகர் பகுதியில் பொறியாளராக திரு சுரேஷ்பாபு என்பவர் பணியாற்றி வருவதாகவும், அவர் தி. நகர் பகுதியில் கட்டட உரிமையாளர்களை மிரட்டி கையூட்டு பெற்று வருகிறார் என்றும், கையூட்டு வழங்காதவர்களை, கட்டடத்தை இடித்து விடுவேன் என அடியாட்களை வைத்து மிரட்டுவதாகத் தெரிவித்து, அவரை பணி நீக்கம் செய்யக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு அழைப்பாணை அனுப்பப்பட்டது. 08.06.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை, முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டிருந்த முகவரிக்கு அனுப்பப்பட்டும், அம்முகவரியில் அந்நபர் இல்லை எனக்குறிப்பிடப்பட்டு அழைப்பாணைக் கடிதம் திரும்பவும் இம்முறைமன்ற நடுவத்திற்கு அஞ்சல் துறையினரால் திரும்ப அனுப்பப்பட்டுவிட்டது. எனவே, மாலே பட்டாச்சாரியார் என்ற பெயரில் முறையீட்டு மனுவினை தாக்கல் செய்த நபரிடம் எதிர்மனுதாரர் மீதான குற்றச்சாட்டுக் குறித்து விசாரணை மேற்கொள்ள இயலவில்லை. . மேலும், அது போன்று நபர் உள்ளாரா எனவும் உறுதி செய்திட இயலவில்லை.

3. எனினும், சென்னை மாநகராட்சி 10–வது மண்டல உதவி ஆணையாளர், செயற்பொறியாளர் திரு வி. சின்னத்துரை மற்றும் எதிர்மனுதாரான உதவி செயற்பொறியாளர் திரு கே. சுரேஷ்பாபு ஆகியோரிடம் 30.07.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. மேற்குறிப்பிட்ட செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகிய இருவரும் இதற்கு முன்பு 10–வது மண்டலத்தில் பணிபுரியவில்லை என்று விசாரணையின் போது உதவி ஆணையர் தெரிவித்தார். உதவி செயற்பொறியாளர் திரு சுரேஷ்பாபு பத்து மாதங்களாக இம்மண்டலத்தில் பணிபுரிகிறார் என்றும் தெரிவித்தார். மேலும், தங்களைப்பற்றி இதற்கு முன்பும், தற்பொழுதும் கட்டட அனுமதி வழங்குவதிலோ அல்லது தங்களது பணிகள் குறித்தோ எந்த புகாரும் வரப்பெறவில்லை எனவும் தெரிவித்தார்.

4. இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்ட மனுதாரரின் புகார் மனு மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவு உட்பட எட்டு அரசு அலுவலகங்களுக்கு முகவரியிட்டு அனுப்பப்பட்டுள்ளது. இதே நபரிடமிருந்து கல்கத்தா நகர், சால்ட் லேக் முகவரியிலிருந்து 18.04.2018 அன்றும் ஒரு மனு பெறப்பட்டது. மனுதாரர் பொய்யான முகவரியைக் குறிப்பிட்டு மனுச் செய்யும் வழக்கத்தினைக் கொண்டுள்ளார் எனத் தெரிகிறது. மேலும் மனுவில் கூட குறிப்பான ஆதாரங்கள் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. எனவே, விதிகளின் படி உரிய படிவத்தில் சரியான முகவரியினைக் குறிப்பிட்டு தாக்கல் செய்யப்படாத இம்முறையீட்டு மனுவின் மீது மேல் நடவடிக்கை தேவையில்லை எனக் கருதி இந்நேர்வினை முற்றாக்க ஆணையிடப்படுகிறது.

**2018**– ஆம் ஆண்டு, **செப்டம்பர்** திங்கள், **24**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக.

1.10.18

பெறுநர்

**உதவி ஆணையர்,**
**மண்டலம் – 10,**
**சென்னை மாநகராட்சி,**
**எண்.64, என்.எஸ்.கே. சாலை,**
**கோடம்பாக்கம், சென்னை – 600 024.**

**நகல்:** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
பேரூராட்சி பிரிவு – 3
**இ.கோ. / உதிரி**